T-UN-499

"ஆனந்தபோதினி" வைகாசி மாத வெளியீடு

## ஸ்ரீரங்கம்

# அத்தியயனோற்சவத் தத்துவம்.

ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை அவர்கள்
எழுதியது.

# ஸ்ரீரங்கம்
# அத்தியயனோற்சவத் தத்துவம்

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை)

'பூலோக வைகுண்டம்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் அன்பர்களால் போற்றப்படும் திருவரங்கப் பெருநகரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள செங்கோலுடைய திருஅரங்கச் செல்வனார், ஆண்டுதோறும் கண்டருளிவரும் திருவிழாக்கள் எல்லாவற்றிலும் மார்கழி மாதத்தில் கண்டருளும் திருஅத்தியயனோற்சவமே மிக்க பிரசித்தி பெற்றதாகும். வைகுண்ட எகாதசிக்கு முன் பத்துநாட்களும் பின் பத்துநாட்களும் திருஅரங்கேசர் கண்டருளும் அவ்வுற்சவத்தைப்பற்றிய பொதுவான சில குறிப்புகளையும் தற்காலத்தில் அவ்வுற்சவத்தில் நிகழும் சில குறைபாடுகளையுங் குறித்து, சென்ற வருடத்துச் சித்திரைமாதத்திய "ஆனந்த"னில் சிறியேன் எழுதியிருந்தது நேயர்கட்கு நினைவிருக்கலாம். அத் திவ்யோற்சவத்தில் அரங்கனைச் சேவித்து மகிழும் பேறு, சென்ற மார்கழி மாதத்திலும் சிறியேற்கு வாய்த்தது. அதன்பயனாக அணியரங்கேசர் அடியேனது அகத்தில் தோற்றுவித்தருளிய சில கருத்துகள், "போதினி" நேயர்கட்கும் பெருமகிழ் ஊட்டக்கூடியனவாக இருக்கும் என்னும் எண்ணத்தால் இக்கட்டுரை வரையத் துணிந்தேன். அரங்கநாயகன் கண்டருளும் அத்தியயனோற்சவத்தின் ஒப்புயர்வற்ற அரிய தத்துவங்களை உள்ளபடி உணர்ந்து உரைக்கக்கூடிய ஆற்றல், சிற்றறிவினனாகிய சிறியேற்குச் சிறிதும் இல்லை என்றாலும், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"—என்னும் ஆர்வங்கொண்டே எழுதப்புகுவதால், இக்கட்டுரையிற் காணப்படும் குற்றங்குறைகளைப் பொறுத்தருளுமாறு அன்பர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

"வைகுண்ட எகாதசி உற்சவத்திற்கு ஸ்ரீரங்கத்திற்குப் போய் வந்தோம்"—என்று பெருமையாகச் சொல்லிக்கொள்பவர்களில், அவ்வுற்சவத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டிய அரும்பொருகள் எவை என்பதைப் பற்றிச் சிறிதளவேனும் சிந்தித்துப் பார்ப்போர் மிக மிகச் சிலரேயாவர். பணத்தைச் செலவிட்டுக்கொண்டு ஸ்ரீரங்கயாத்திரை போய் வந்துங்கூட, தாம் அங்கு கண்டு களித்த பலவகை விநோதங்களைப்பற்றிப் பேசி மகிழுமளவில் நின்றுவிடுவோரும் அவ்விடத்தில் காண நேர்ந்த குறைபாடுகளையே எடுத்துரைத்து அத்தியயனோற்சவத்தைப் பரிகசிப்போருமே பற்பலராக இருந்து வருகின்றனர். அத்தகையோர் பணச்செலவு செய்துகொண்டு யாத்திரை சென்று வந்ததால், எத்தகைய நற்பயனும் எய்தப்பெறாதொழிவர் என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. குறைபாடுகளையே ஆராய்வோர் கண்களுக்கு, உற்சவங்களின் உண்மைத் தத்துவம் புலனாவது அரிது. இறைவனிடம் இடை

யமுத உண்மையன்புடைய மெய்யன்பர்களது கண்களும் கருத்தும், இறைவனது இன்னருள் திருவுருவம் ஒன்றையே நாடி நிற்பதல்லால், மற்றவற்றின் மேல் செல்வன ஆகா. ஆதலின், எவர் என்ன கூறினும், திருக்கோயில்கள் இன்றும் ஆன்ம உருக்கத்திற்கு உரிய ஆனந்த நிலையங்களாகவே உண்மையன்பர்கள் கண்களுக்குத் தோன்றுகின்றனவேயன்றி, இறைவனது திவ்ய சாந்நித்யத்தை இழந்துவிட்ட இடங்களாகத் தோன்றுவதில்லை.

மார்கழி மாதத்திய சுக்கிலபட்சத்துப் பிரதமைமுதல் பத்துநாட்கள் நடைபெறுவது 'பகற்பத்து உற்சவம்' என்றும்; ஏகாதசி முதல் பத்துநாட்கள் நடைபெறுவது 'இராப்பத்து உற்சவம்' என்றும் வழங்கப்பட்டு வருகிறது. அவற்றை முறையே 'திருமொழித் திருநாள்' என்றும் 'திருவாய்மொழித் திருநாள்' என்றும் கூறுவர் ஸம்ப்ரதாயம் அறிந்த பெரியோர். வடமொழி மறைகள் இறைவனது திருக்குணங்களை வருணிக்கத் தொடங்கி அவற்றின் எல்லை காண இயலாமல் பின்னும் பின்னும் அவனைப் பின்பற்றிச் செல்வதைக் குறிப்பிக்க, இன்றும் திருப்பதிகள்தோறும் உற்சவகாலத்தில் பெருமாள் திருவீதி உற்சவம் கண்டருளும்போது அவருக்குப் பின்னே பாராயணம் செய்யப்பட்டு வருவதும்; ஆழ்வார்களது அருளிச்செயல்களாகிய செந்தமிழ்மறைகள் இறைவனது நிலையை உள்ளபடி உணர்ந்து 'தெளியாத மறைநிலங்கள் தெளிவித்து' வடமொழி மறைகளுக்கு முற்பட்டமை தோன்ற பெருமாளுக்கு முன்னே பாராயணம் செய்யப்பட்டு வருவதும் ஆழ்ந்து கூர்ந்து சிந்தித்துப் பார்ப்பதற்கு உரியன. அத்தகைய தமிழ் மறைகளை திருச்செவிகள் குளிரக் கேட்டருள்வதற்காகவே, திருவரங்கேசர் மிக்க பிரபலமான திருவத்தியயனோற்சவம் கண்டருளுகிறார். அவ்வுற்சவத்தின் முன் பத்துநாட்களில் திவ்யப் பிரபந்தத்தின் முதல் இரண்டாயிரத்தையும், பின் பத்துநாட்களில் கடைசி ஆயிரமாகிய திருவாய்மொழியையும், இருபத்தொன்றாந் திருநாள் இரவில் மூன்றாவது ஆயிரமாகிய இயற்பாவையும் பெருமாள் கேட்டருள்கிறார்.

இந்து மதத்தினர்க்குப் பிரதான பிரமாணமாவன வேதங்களே. ஆயினும், வடமொழியிலுள்ளனவும் எளிதில் பொருள்விளங்காதனவுமாகிய அம்மறைகளைப் பயில்வதற்கு எல்லோருமே உரிமை உடையவர்கள் ஆகார் என்று கூறப்படுகின்றது. 'அவ்வுரிமை இல்லாதவர்கள் உய்வது எவ்விதம்' என்பதைப்பற்றி உரிமை பாராட்டுவோர் கவலை எடுத்துக்கொள்ளாவிடினும், கருணைக்கடலாகிய இறைவன் கவலைப்படாதிருக்க முடியுமோ? எனவே, தனது சங்கு, சக்கரம், தண்டு' வில், வாள் முதலிய ஐம்படைகளையும், தனது திருமார்பில் விளங்கும் ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம், வனமாலை முதலியவற்றையும், 'ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி—வழுவிலா அடிமை செய்து' தன்னை மகிழ்விக்கும் சேனைமுதலியார், கருடாழ்வார், பூமிப்பிராட்டியார் முதலியவர்களையும் மண்ணுலகில் பல குலங்களிலும் தோற்றுவித்து, எக்குலத்தினரும் எப்பருவத்தினரும் ஓதி உணர்ந்து உய்யக்கூடியவாறு அகத்தை உருக்கி அன்பைப் பெருக்கும் அருட்பாக்களைப் பாட்டுவித்தருளினான். அத்தகைய 'அருளிச்செயல்க'ளைத் தோற்றுவித்தபின்னும், 'தமிழ்ப் பாக்கள் தானே' என்று தமிழ் மறைகளை அலட்சியமாகக் கருதி நடக்கத்துணிந்தவர்களது அகங்காரம் அகலுமாறு, திவ்யோற்சவவாயிலாக வடமொழி மறைகட்குக் கிட்டாத தனிப்பெருஞ் சிறப்பைத் தமிழ்மறைகட்கே அரங்கேசர் அளித்தருளினார். அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங்கருணையாளராகிய திருவரங்

கேசர், தாம் கண்டருளும் திருவத்தியயனோற்சவ வாயிலாக, 'தமது திருவருளைப்பெற்று உய்வதற்குச் சிறந்தவழி, தமிழ்மறையாகிய திவ்யப்பிரபந்தத்தை மெய்யன்போடு ஓதி உணர்ந்து உண்மை தெளிந்து ஒழுகுவதே'—என்னும் உயரிய தத்துவத்தை அன்பர்களுக்குச் செவ்விதில் உணர்த்தி யருள்கிறார்.

இனி, திருவத்தியயனோற்சவம் கண்டருளப் பெருமாள் சந்நிதியினின்றும் புறப்பட்டருள்வதைக் கவனிப்போம். சந்நிதியிலிருந்து புறப்பட்டு த்வாரபாலகர்களருகில் எழுந்தருளியவளவில், பெருமாள் சீரிய சிங்கமேபோல் துள்ளிக் குதித்துத் தாவிப் பாய்ந்து இரண்டடி சென்று நிற்பார் அவ் வற்புத சேவையை அகக்கண்கொண்டு நோக்கும் மெய்யன்பர்கட்கு, 'தன்னை உண்மையன்புடன் வழிபடுவோரது துயரங்கள் அனைத்தையும் அகற்றி அருள்புரிவதில், தனக்கு எத்தகைய சக்தியும் எவ்வளவு ஆர்வமும் இருக்கின்றன'—என்பதை அரங்கேசர் வெளியிட்டருளும் உண்மை இனிது புலனாகும். 'ஒப்புயர்வற்ற பேராற்றல் பெற்ற பெருந்துணைவன் இருக்கும்போது, அற்ப மனிதர்களையெல்லாம் துணைவர்களாக நம்பிப் பற்பல முறைகளில் ஏமாந்து ஏங்குகின்றோமே'—என்று மெய்யன்பர்களைப் பெரிதும் ஏங்கிநிற்கச் செய்விக்கும் அரங்கேசரது அரிமாநடை, 'இறைவன் ஒருவனே இன்னுயிர்க்கு உரிய இணையற்ற துணைவன்'—என்னும் தத்துவத்தை நன்கு விளக்கிக் காட்டுவதாகும்.

பெருமாள் மண்டபத்திற்கு எழுந்தருளியவுடனே, திரை போடப்பட்டு விடுகிறது. பின்பு சிறிதுநேரம் சென்றபின்னரே, திரை விலக்கப்பட்டு ஆழ்வார்களுக்கு அருளப்பாடு ஆவதுடன், அன்பர்கட்கும் சேவை கிடைக்கின்றது. அக்காட்சி, அஞ்ஞானத்தில் ஆழ்ந்துகிடந்தவர்களுக்குத் தன்னை மறைத்துக்கொண்ட பெருமாள், அவர்கள் கருணையே உருவாய்த் தோன்றிய ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப் ப்ரபந்தங்களில் ஆர்வமும் பயிற்சியும் கொண்டுவிட்ட பின்னும் தனது இன்னருளை ஒளித்துவைத்துக்கொள்ள முடியாமல் வெளியிட்டுவிடும் உண்மையை நினைவூட்டுவதாக விளங்குகிறது. பின்னர்,

"திருநாளுடைய பிரான், கலியன், ராமாநுசன், பட்டர்பிரான், மதுரகவி,
பொய்கை, பூதன், பேயார், சேரன், பாணன், தொண்டரடிப்பொடி,
மழிசை, நம்பி, ஆழ்வான், பிள்ளை லோகாசாருக் கருளிப்பாடு"—

என்று பெருமாள் ஸ்தானிகர் வாயிலாக மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வார் முதலான பதினைந்து அடியார்களுக்கும் அருளப்பாடு சாதிக்கும் காட்சியும்; அவர்களுக்கெல்லாம் பெருமாள் பிரசாதங்களான திருமாலை, திருப்பரிவட்டம், சந்தனம், ஸ்ரீசடகோபம் முதலியவை சாதிக்கப்படும் காட்சியும் பக்தர்களைப் பரவசப்படுத்துவனவாகும். 'உள்ளத்தை உருக்கும் ஒப்பற்ற பிரபந்தப் பாசுரங்களை அருளிச்செய்த ஆழ்வார்கள் காலத்திலே நாம் பிறந்தோமில்லையே'—என்று ஏங்கி நிற்கும் மனக்கவலை நீங்கப்பெறுவதேபோல், அர்ச்சைத் திருவுரு (திவ்ய மங்கள விக்கிரக வடி) வில் விளங்கும் அவ்வாழ்வார்களுக்கு அரங்கேசர் அருளப்பாடு சாதிக்கும் காட்சியைக் கண்களாரக் கண்டு களிக்கும்பேறு வாய்க்கப்பெறுவது, உண்மையன்பர்களது உள்ளத்திற்கு ஒப்பற்ற பெருமகிழ்ச்சி விளைவிப்பதாகும்.

பின்னர், அரையர்கள் திருத்தாளங்களின் துணைகொண்டு 'செவிக்கினிய செஞ்சொற்க'ளாகிய திவ்யப்பிரபந்தப் பாசுரங்களை விண்ணப்பிப்பதும்; தினந்

தோறும் சேவை தொடங்குமுன் முதற்பாசுரத்திற்கு இணங்க அபிநயம் செய்வதும்; 'வ்யாக்யானம்' என்னும் விசேட உரை கூறுவதும் கண்களுக்கும் செவிகளுக்கும் ஒருங்கே பெருவிருந் தளிப்பனவாகும்.

அத்தியயனோற்சவம் நடைபெறும் இருபதுநாட்களிலும், நாடோறும் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களும் இராமாநுசர் முதலிய ஆசார்யர்களும் தத்தம் சந்நிதிகளுக்கு எழுந்தருளும் வைபவத்தைக் கண்களாரக் கண்டு களிக்கவேண்டுமேயன்றி, எழுதி உணர்த்த இயலாது. நம்மாழ்வார் ஸந்நிதியில் ஆழ்வாரது திருமாலையும் 'மதுரகவி'யும் சாதிக்கப்பெறுகிற இராமாநுசர் தமது சந்நிதிச்கு எழுந்தருளியதும், எல்லா அன்பர்களுக்கும் தீர்த்தப்பிரசாத விநியோகம் உடையவர் சந்நிதியில் நடைபெறும் காட்சியைக் காணும் அன்பர்களது நெஞ்சிலே, 'எம்பெருமானார் தரிசனம்' என்று நம்பெருமாள் பெயரிட்டு நாட்டிவைத்தருளிய 'ராமாநுஜ ஸித்தாந்த'த்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆசார்ய அநுக்கிரகமும் பகவத் கிருபையும் வாய்க்கச்செய்வது, தமிழ் மறைகளாகிய திவ்யப்பிரபந்தங்களை உண்மையன்போடு பயில்வதே'—என்னும் தத்துவம் நன்கு புலனாகும்; நெற்றியில் திருமண் இட்டுக்கொண்டு விடுவதாலேயே உண்மை வைணவர்களாகிவிட முடியாது என்பதும், ஆன்ம உருக்கத்திற்கேற்ற ஆழ்வார்களது அருளிச்செயல்களை உண்மையன்போடு பயில்வதாலேயே வைணவத்தன்மையை எய்தக்கூடும் என்பதும் இனிது விளங்கும்.

பெருமாள் ஆஸ்தானத்திற்கு எழுந்தருள்வதற்கு முன்னர், தாஸநம்பிகள் பந்தம்பற்றி அசைய—அரையர்கள் 'கலியன் பரவும் பெருமாள்!' 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனுக்குப் பல்லாண்டுபாடிய பட்டர்பிரான் பரவும் பெருமாள்!' வண்டணியும் மகிழ்மாறன் வண் தமிழ்தன் இசைகொண்டு வரியரவிலே துயிலும் பெருமாள்!' 'நல்லார்கள் வாழும் நளிராரங்க நற்பெரு பெருமாள்!' 'குளிர்சோலை சூழ்பெரியகோயில் குடிகொண்ட திருவரங்கேசப் பெருமாள்!'—என்று கொண்டாட்டங்கள் கூறி அசைய—ஸ்ரீ பாதந்தாங்கிகள் தோள்களில் தாங்கி அசைய—ஸ்தானீகர்கள் திருத்தோளுக்கினியானைப் பற்றி அசைய—அர்ச்சகர் திருவடிகளைப்பற்றி அசைய—சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்கள் மலர் இதழ்களோடு கலந்த பச்சைக்கற்பூரத்தூளை வாரி இறைக்க—திருவரங்கேசர் சாதித்தருளும் 'படியேற்றசேவை' ஒப்புயர்வற்ற அற்புத திவ்ய ஸேவையாகும்.

பகற்பத்து உற்சவத்தில், திவ்யப்ரபந்தப் பாசுரங்களில் வரும் பகவத் வைபவங்களுக்கு இணங்க 4-5-7-8-9-10 வது திருநாட்களில், முறையே 'கம்ஸ வதம்' 'ஸ்ரீரங்கராஜ அத்யயனோத்ஸவம்' 'வாமனாவதாரம்' 'அம்ருதமதனம்' 'முத்துக்குறி' 'ராவணவதம்' முதலிய வைபவங்கள் விசேஷ அபிநயங்களாக அரையர்களால் அபிநயித்துக் காட்டப்படுகின்றன. அவற்றுள், 'கம்ஸ வத அபிநயம்'—'யான்' 'எனது' என்னும் செருக்கு மிகுந்து இறைவனை மறந்து தீவினைகளில் அஞ்சாது தலைப்படுவோர் முதலில் சுகமாக வாழ்வதாகத் தோன்றினாலும், முடிவில் தமது தீவினைகளுக்குத் தகுந்த தண்டனையைத் தவறாது அடைவர்' என்னும் தத்துவத்தையும்; 'ஸ்ரீரங்கராஜ உத்ஸவ அபிநயம்'—'கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து உண்மைப் பேரின்பம் ஊட்டி ஆன்மாவை உய்விக்கக்கூடிய அரங்கேசர் திருவடிகளில் அன்பு கொள்ளாமல், பொய்யின்பப் பொருள்களில் மையல்கொண்டு பலவகைத் துன்பங்களுக்கும் உட்படுவது பெரும் பேதைமையாகும்' என்னும் தத்துவத்

தையும்; 'வாமனாவதார அபிநயம்'—'இறைவனுக்கே உரிய பொருள்களைத் தன்னுடையனவாகக்கொண்டு 'எனதுடைமை' 'எனதடிமை' 'எனதுரிமை' என்றிருக்கும் அகங்காரம்சொல்வோர், பகவத்விஷயத்தில் பெரிதும் அபசாரப்படுவோராவர்' என்னும் தத்துவத்தையும்; 'அம்ருத மதன அபிநயம்'—வடமொழி மறைகளாகிய பரந்த கடலைத் தமது திருநாவாகிய மந்தரகிரியால் கடைந்தருளிய நம்மாழ்வார் மெய்யன்பர்கள் உய்யுமாறு அளித்தருளியதும் நினைக்குந்தோறும் பயிலுந்தோறும் இணையற்ற இன்பம் நுகர்விப்பதுமாகிய தெவிட்டாத தெள்ளமுதமாம். 'திருவாய்மொழி'யின் இன்சுவையை அனுபவித்தவர்கள், வேறு எச்சுவையையும் சிறிதும் மதிக்கமாட்டார்கள்' என்னும் தத்துவத்தையும்; 'மூத்துக்குறி அபிநயம்'—'பகவத்வைபவங்களை நல்லாசிரியர் சொல்லக்கேட்டு உண்மை தெளிந்து இறைவனது திருவருள் ஒன்றையே எதிர்பார்த்துக் கிடப்பது மெய்யன்பர் இயல்பு' என்னும் தத்துவத்தையும்; 'ராவணவத அபிநயம்'—'ஆண்டவன் உண்மை யன்போடு உள்ளம் உருகி நின்று தனது திருவடிகளில் அடைக்கலம் புகுவோரது பிழைகள் எவற்றையும் பொறுத்தருள்புரியும் பெருங்கருணைக்கடலாக இருந்தும், அவனைச் சரணடைய ஒருப்படாத அகங்காரிகள் முடிவில் அடியோடு அழிந்துபடுவர்' என்னும் தத்துவத்தையும் உண்மையன்பர்களுக்குச் செவ்விதில் விளக்கிக் காட்டுவனவாக விளங்குகின்றன.

பகற்பத்து உற்சவத்தின் கடைசித் திருநாளாகிய பத்தாந் திருநாள் மாலையில், திருவரங்கேசர் 'மோகினி அலங்காரம்' பூண்டு எழுந்தருள்கிறார். வருடந்தோறும் அன்று ஒரே ஒருநாள்மட்டும் 'நாச்சியார் திருக்கோலம்' சாத்திக்கொள்ளும் நம்பெருமாள், வேறு எந்த உற்சவத்திலும் எத்தகைய திருக்கோலமும் சாத்திக்கொள்வதில்லை. பெண்மையின் பெருமையும் தனிப்பட்ட இயற்கைப் பேரழகும் அன்புததும்பும் வசீகரத் தோற்றமும்—தாய்மையின் அருள் நிரம்பிய பார்வையும் உயிர்களின் தோற்றத்திற்கும் ஆக்கத்திற்கும் காரணமாய் நிற்கும் நீர்மையும் அன்பர்களது பிழைகளைப் பொறுத்து அருள்புரியும் தனிப்பெருங்கருணையும்—இறைமையின் இன்னருளும் சாந்தமும் சிங்காரமோகன ரங்கேசரது மோகனாவதாரத் திருக்கோலத்தை உண்மையன்போடு சேவிப்போர் உள்ளத்தில் தோன்றுவனவாகி, 'இமையவர்கட்கு அளித்த இன்னமுதத்தினும் பன்மடங்கு சிறந்த தெள்ளமுதமாகிய அருளிச்செயல்களின் சுவையை நுகரும் பேற்றைத் தென்னரங்கத்து இன்னமுதர் தமது அன்பர்கட்கு அளித்தருள்கிறார்'—என்னும் தத்துவத்தை இனிது விளங்கச் செய்யும்.

இனி, 'வைகுண்ட ஏகாதசி உற்சவ வைபவ'த்தைச் சிறிது கவனிப்போம். திருப்பாற்கடலில் ஆலிலைமேல் அறிதுயில்கொண்டிருந்த அமலனது திருவுந்திக் கமலத்திலிருந்து தோன்றிய நான்முகன் ஆணவம் கொண்டபோது, இரு அரக்கர்கள் தோன்றிப் பிரமனை வென்று செருக்கடக்கினர். பின்னர், அப்பெருமாளுடனேயே போர் தொடங்கி அவரால் கொல்லப்பட்டு வைகுந்தம் அடைந்த அவ்வரக்கர்கள், அவர் தங்களுக்கு அனுக்கிரகம் செய்ததைப் பூவுலகில் உற்சவமாகக் கொண்டாடுமாறு வரந்தரவேண்டுமென்று பெருமாளைப் பிரார்த்தித்துக்கொண்டனர். பெருமாள் மார்கழி மாதத்திய சுக்கில பட்சத்து ஏகாதசியன்று அருணோதயவேளையில், வடக்குவாசலைத்திறந்து அதன் வழியாக அவ்வரக்கர்களை அழைத்துச்சென்று வைகுந்தமாநகரில் சேர்த்

தருளினர். அவ்வாறு அரக்கர்களுக்கு அருள்செய்த வைபவத்தைக் குறிப்பிக்கவே, இப்பொழுதும் இரத்தமெனச் சிவந்த இரத்தினகவசம் அணிந்து மார்கழி சுக்கில ஏகாதசி காலையில் புறப்பட்டருளும் திருவரங்கேசர், வடக்குத் திருவாசலாகிய வைகுந்தவாசலைத் திறந்து ஆயிரக்கால் மண்டபமாகிய பரமபதத்திற்கு அன்பர்களை அழைத்துச் செல்கிறார் என்று பெரியோர் கூறுவர். (ஏகாதசியன்று தொடங்கிப் பத்துநாட்கள் நடைபெறும் இராப்பத்து உற்சவத்தில், 1-7-8 ஆகிய மூன்றுநாட்கள் தவிர ஏனைய திருநாட்களில் பெருமாள் போர்வை சாத்திக்கொண்டு புறப்படுவது, தனது சிந்தைக்கினிய அன்பன் பொய்யின்பப்பொருள்களில் மையல் கொண்டு விடாதவாறு அவனைத் தன்னோடு போர்த்துக்கொண்டு இட்டுச் செல்வதைக் குறிப்பிடுவதாகும். விரஜாநதியில் தீர்த்தமாடியவுடனே பிரகிருதி சம்பந்தம் நீங்கித் திவ்யதேகம் பெற்றுவிடுவதை உணர்த்தியருள, அரங்கேசர் வேதவிண்ணப்பம் சேட்டருளும் இடமாகிய விரசையைத் தாண்டியவுடனே வைகுந்தவாசலில் திரைக்குள் நின்று போர்வை களையப்பெற்றுத் திருமாலை சாத்திக்கொண்டருள்கிறார்.) பெருமாளையும் பரமபதத்திற்கு வரும் அன்பர்களையும் நித்தியசூரிகள் வரவேற்க வருவதைக் குறிப்பிக்க, அன்பர்களுடன் எழுந்தருளும் அரங்கேசரை ஆழ்வார்கள் எதிர்கொள்ள எழுந்தருள்கின்றனர்.

இராப்பத்து உற்சவத்தில், கடைசிநாள் தவிர ஏனைய ஒன்பது நாட்களிலும், பெருமாள் உள்ளே எழுந்தருளும்போது வீணைகானம் கேட்டுக்கொண்டே எழுந்தருள்வது, 'மூன் நல் யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவை' என்று நம்மாழ்வார் அருளியவாறு இணையற்ற இனிய கானமாகிய வீணை கானத்தால் இறைவன் எத்தகைய இன்பம் எய்துகின்றான் என்பதை இனிது புலப்படுத்துகின்றது. 'உள்ளம் உருகுமாறு தன்னைமறந்து இன்னிசை பாடித் துதித்து நிற்போர், 'சாமவேத கீத'னாகிய அரங்கநாயகனது இன்னருளை எளிதில் எய்தப்பெறுவர்'—என்னும் உண்மை, அரங்கேசர் வீணைகானம் கேட்டருளும் 'ஏகாந்த ஸேவை'யை உண்மையன்போடு ஸேவிப்போர்க்கு இனிது விளங்கும். 'பாலேய் தமிழர் இசைகாரர்'—என்று நம்மாழ்வார் அருளியவண்ணம் இன்னிசையில் பெரும் பற்றுடைய தமிழர்களுக்கு, ஒப்பற்ற இன்பம் ஊட்டும் உயிரற்ற தோழனாகவே யாழ் விளங்கிவந்திருக்கின்றது' என்னும் உண்மை, தமிழ்மறையாகிய பிரபந்தத்திலே பலவிடங்களில் விளங்கக்கிடக்கின்றது.

இராப்பத்து உற்சவத்தில் ஏழாந் திருநாளன்று திருவரங்கப் பெருநகரின் மங்களாசாசனமாகிய "கங்குலும் பகலும்"—என்னும் திருவாய்மொழி நேர்வதால், அன்று "திருக்கைத்தலஸேவை"—நடைபெறுகின்றது. அரங்கனிடம் கொண்ட காதல் மிகுதியால் தம்மை ஒரு நாயகியாகப் பாவித்துக்கொண்ட நம்மாழ்வார், 'தம்மைக் குறித்துப் பெருமாள் என்ன சிந்தித்திருக்கிறார்' என்பதை, (தமது மனத்தால் சிருட்டிக்கப்பெற்ற தமது) தாயார் வினவுவதுபோல, அத்திருவாய் மொழியில் நம்பெருமாள் விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றார். அவ்வைபவத்தை அன்பர்கட்கு உணர்த்தியருள்வதற்காக, இன்றுபட்டும் நம்மாழ்வார் 'நாச்சியார்திருக்கோலம்' பூண்டு எழுந்தருள்கிறார். பெருமாள் மண்டபத்திற்கு எழுந்தருளியதும் போடப்படும் திரை சிறிது நேரத்திற்குப் பின்னர் நீக்கப்பட்டவுடனே, "மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே!" என்று தம்மைக் கூவியழைக்கும்படி தம்மிடம் 'கடலினும்

பெரிய காதல் கொண்ட' பராங்குச நாயகிக்கு, அருட்பெருஞ்சோதியாளராகிய அணியரங்கேசர் பட்டர்களது திருக்கைத்தலங்களில் நின்று பேரொளியி னிடையே அற்புத திவ்யஸேவை சாதித்தருள்கிறார்.

அனைவரையும் தான் விரும்பியவாறு ஆட்டிவைக்கும் தனிப்பெருஞ் சுதந்திரம் உடையவனாக விளங்குவதுபற்றி 'புருஷோத்தமன்' என்று போற் றப்படும் அரங்கநாயகனால் காக்கப்படும் அனைவரும் பெண்தன்மை உடைய வர்களேயாவர். அதனை வலியுறுத்தவே நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முத லிய அடியார்கள், தங்களைப் பெருமாளாகிய நாயகனது கருணையையே எதிர் பார்த்துக்கிடக்கும் நாயகியாகப் பாவித்துக்கொண்டு பெருமாள் விஷயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இறைவனது திருவருட்பெருக்கை உணர்த்தும் வைபவங்களைப்பற்றி அடிக்கடி சிந்திப்பதும்; இரவும் பகலும் தன்னையே நினைத்துத் தவித்து நிற்பதறிந்தும் விரும்பிநிற்கும் அரும்பேற்றை விரைந் தளிக்கத் திருவுள்ளங்கொள்ளாத இறைவன், தன்னைப் பலவகைப்பட்ட கொடிய சோதனைகளுக்கும் உட்படுத்தும் திருவிளையாட்டை எண்ணித் திகைப்பதும்; முதலில் மெய்யன்பர்களைப் பெரிதும் சோதிப்பதாகத் தோன்றி னாலும், முடிவில் தனது இன்னருளுக்கு இலக்காக்கிக் கொண்டருளும் இறைவனது தனிப்பெருங் கருணைத்திறத்தைப் பாகவதபக்தர்களது வைபவங் கள் உணர்த்தும் உண்மை தெளியப்பெற்று அகம் தேறுவதும்; எத்தகைய சோதனைகளுக்கு உள்ளாகநேர்ந்தாலும் மன உறுதி குன்றாது, தன்னைக் காத் தருளும் பொறுப்பை இறைவனிடமே ஒப்புவித்துவிட்டு நிற்பதைக் குறிக்க, இருகரங்களையும் தலையின்மேல் கூப்பித் துதித்து நிற்பதும்; தனது சிறுமை யையும் இறைவனது பெருமையையும் சிந்தித்துச் சிந்தித்துத் தன்னை உய்விக் கக்கூடிய தயாநிதி ஆண்டவனைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை உணர்ந்து, தன்மேல் திருவுள்ளம் இரங்கி யருளுமாறு இதயம் உருக—இரு விழிகளிலும் இன்பக்கண்ணீர் பெருகி வழியநின்று இறைவனைத் துதிப்ப தும் உண்மையன்பர்க்கு உரிய இலக்கணங்களாகும். அவ்வண்ணம்,

> "சிந்திக்கும்; திகைக்கும்; தேறும்; கைகூப்பும்;
> திருவரங்கத்து உள்ளாய்' என்னும்;
> வந்திக்கும்; ஆங்கே மழைக்கண்ணீர் மல்க
> வந்திடாய்! என்றென்றே மயங்கும்"—

என்று நாயிகா பாவம் கொண்ட நம்மாழ்வார் நம்பெருமாள் விஷயத்தில் ஈடு பட்ட வைபவம், பெருமாள் சாதித்தருளும் திருக்கைத்தலச் சேவையை உண்மையன்போடு சேவிப்போர் உள்ளத்தில் தோன்றி அவர்களைப் பெரிதும் உருகி நிற்கச்செய்யும்.

எட்டாந் திருநாளன்று மாலையிலே, தமது அரச மிடுக்கு முழுவதும் தோன்ற குதிரைவாகனத்தில் ஆரோகணித்து எழுந்தருளும் திருவரங்கச் செல்வனார், 'வேடுபறி உற்சவம்' கண்டருள்வது அற்புதக்காட்சி ஆகும். முத லில் சிலையில் கணையைத் தொடுத்துக் குறிபார்ப்பதுபோன்றும்; பின்னர் படையும் வாளும்பற்றிய கைகள் உடையவராய்ப் பெருமாளது பொருள்களைக் களவாட வருவதுபோன்றும் எழுந்தருளும் திருமங்கையாழ்வார்; முடிவில் பெருமாளால் வலிந்து தடுத்தாட்கொள்ளப்பெற்று 'யான்' 'எனது' என்னும் செருக்கு நீங்கப்பெற்று ஆண்டவனுக்கு அடிமைப்பட்டதைக் குறிக்க கூப்பிய

கைகளுடன் கூடியவராய் எழுந்தருள்கிறார். அக்காட்சி, தனது ஒப்புயர்வற்ற பேராற்றலை உணர்ந்துகொள்ளப் போதிய மெய்யறிவில்லாதவர்களாய்—மாயையால் மயங்கியவர்களாய்த்—தன்னிடம் பயபக்தி யற்றவர்களாய் உழல்பவர்களிடமும் தனது திருவுள்ளத்தில் கருணை தோன்றிவிட்டால், இறைவன் அவர்களையும் 'பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்—செயல் நன்றாகத் திருத்திப் பணிகொண்டருள்வான்' என்னும் தத்துவத்தை அன்பர்கட்கு விளக்கிக்காட்டுவதாகும்.

பத்தாம் திருநாளன்று மாலையில் புறப்பட்டருளும் நம்பெருமாள், இரவில் ஆயிரக்கால் மண்டபத்தில் திருமஞ்சனம் கண்டருளி—ஏராளமான 'சாற்றுமுறைப் பிரசாதங்கள்' என்னும் பலவகைப்பட்ட பலகாரங்களும் அமுதுசெய்தருளி—நம்மாழ்வாருக்கு மோட்சம் அளித்தருளி—ஆழ்வார்களுக்கு விடை கொடுத்தருளி ஆஸ்தானம் சென்று சேர்வதற்குள், மறுநாள் மாலையாகி விடுவது வழக்கம். ஆதலின், அத்தியயனோற்சவத்தின் இருபத்தொன்றாவது நாள் காலையிலேயே, 'ஆழ்வார் மோட்ச சேவை' நடைபெறுகின்றது. திருவாபரணங்கள் முதலிய அலங்காரங்கள் எவையுமின்றி தூயவெண்கலை அணிந்து 'திருமாமணிமண்டப'த்தில் எழுந்தருளியிருக்கும் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனாரது செங்கமலவண்ண மென்மலர்த் திருவடிகளிலே, பன்னிரு திருமண்காப்புகளும் திருத்துழாய்மாலையும் வெண்கலையும் அணிந்து கொண்டிருக்கும் நம்மாழ்வார் இரண்டறக் கலந்தருளும் திவ்ய சேவை, உண்மையன்பர்கட்குப் பரமபத ஆனந்தானுபவத்தைப் பூவுலகிலேயே வாய்க்கச் செய்வதாகும். ஒப்புயர்வற்ற அவ்வர்புத சேவை, 'அற்றது பற்று எனில், உற்றது வீடு உயிர்'—என்று திருவாய்மொழியின் முதலிலும்; 'அவா அற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்'—என்று கடைசிப்பாசுரத்திலும் ஆழ்வார் அருளியதற் கிணங்க, 'நில்லாதவற்றை நிலையென நினைத்து அவற்றின்மேல் கொள்ளும் 'ஆசை' என்னும் பேயை அகத்தைவிட்டு அகற்றினாலன்றி, மாயையினின்றும் விடுதலை பெறுவதாகிய 'மோட்ச'த்தைப்பெற இயலாது' என்னும் அரும் பெருந் தத்துவத்தை அன்பர்கட்கு நன்கு உணர்த்துவதாகும்.

'ஆசைக்கு ஓர் அளவில்லை' என்பதும்; அப்பேயின் தூண்டுதலுக்கு இணங்கி அதைத் திருப்திப்படுத்தக் கருதி எவ்வளவு இரை அளிப்பினும், அது மேன்மேலும் இரைவேண்டித் தூண்டிக்கொண்டே யிருக்குமேயன்றி, எக்காலத்திலும் எதனாலும் த்ருப்திப்பட்டுவிடாது என்பதும்; அப்பேயை அகத்தினின்றும் அகற்றிவிட்டாலன்றி, இறைவனது இன்னருளை எய்த இயலாது என்பதும்; அப்பேயை உள்ளத்தினின்றும் ஓட்டிவிட்டால், இறைவனது திருவருளுக்கு இலக்காகி என்றுங் குன்றாத பேரின்பத்தைப் பெற்று உய்யலாம் என்பதும் வேதாந்தத்தின் முடிவான சீரிய தத்துவங்களாகும். அத் தத்துவங்களை அகத்தில் கொண்டு, நம்பெருமாள் திருவடிகளில் நம்மாழ்வார் கலந்தருளும் காட்சியை உண்மையன்போடு சேவிக்கும் மெய்யன்பர்கள், ஆசைப் பேய்க்கு அடிமைப்பட்டுப் பலவகைப்பட்ட அல்லல்களுக்கும் உட்பட்டு உழலாமல், திருவருளே உருவாகக்கொண்டு பூவுலக வைகுந்தமாக விளங்கும் திருவரங்கப் பெருநகரில் எழுந்தருளியுள்ள திருவரங்கச் செல்வருக்கே அடிமைப்பட்டு என்றுங் குன்றாப் பேரின்பம் எய்தப்பெற்று உய்வர் என்பது உறுதியாகும்.



ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.